**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

# DEPOSITION OF WITNESS

**Calendar Case No. 215/2019**
**Prosecution Witness**:PW2

| | | | |
|---|---|---|---|
| Name | திருமூர்த்தி | Caste | |
| Father's Name | சுப்ரமணி | Calling | |
| Village | பெரியகானுர் | Religion | |
| Taluk | அவிநாசி | Age | |
| District | திருப்பூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **22th day of May 2025** by M.Thangamani, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused present)*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் மேற்படி முகவரியில் குடியிருந்து கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 13.01.2019 ம் தேதி மதியம் சுமார் 01.30 மணியளவில் நான் நம்பியாம்பாளையத்தில் உள்ள எனது வீட்டில் இருந்த போது என் தங்கை பூங்கொடியிடம் இருந்து எனக்கு போன் வந்தது. அவர் என்னிடம் தான் துணி துவைக்க போகும்போது ஆஜர் எதிரி கார்த்தியும் இன்னொரு பையனும் குளத்திற்கு வருவாய் என நின்று கொண்டிருந்தால் தோட்டத்திற்கு செல்கிறாயா தேவடியா கண்டாரோழி என்று திட்டியதாக என்னிடம் சொன்னார். நான் நம்பியாம்பாளையத்தில் இருந்து என் தங்கையின் வீட்டிற்கு வந்து அவரை அழைத்து கொண்டு விநாயகர் கோயில் அருகே சென்றேன். அங்கு நின்று கொண்டிருந்த எதிரி மற்றும் இன்னொரு பையனிடம் ஏன் இப்படி பேசுகீறீர்கள் என கேட்டேன். அதற்கு அவர்கள் இருவரும் என்னை பார்த்து தேவடியா பூண்ட மகனே உன்னையும் கொல்லுவேனடா என மிரட்டினார்கள். பேசிக் கொண்டே கீழே கிடந்த செங்கல்லை எடுத்து அடிக்க வந்தார்கள், அதனை என் தங்கை தடுத்தார். கார்த்தி என்னை அடிக்க வந்தார்.

கிருஷ்ணமூர்த்தி ஒரு அரிவாளை எடுத்து என் தங்கையின் தலையில் வெட்டினார், அதை நான் தடுக்க போனபோது எனது இடது காதிலும் வெட்டினார். அருகில் இருந்த ஒரு நபர் வந்து தடுத்தார், எங்களை மருத்துவமனைக்கு அனுப்பி

வைத்தார். நாங்கள் இருவரும் சேயூர் காவல் நிலையம் சென்று நடந்த விபரம் சொல்லிவிட்டு அவிநாசி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சையில் சேர்ந்து பின்னர் எங்கள் இருவரையும் மருத்துவர்கள் திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். சம்பவ சமயத்தில் எதிரிகள் பயன்படுத்திய அரிவாளை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும், அது தற்போது என்னிடம் காட்டப்படுவது தான். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :-**

எனது தங்கையான அ.சா.1 சம்பவ நாளன்று மதியம் சுமார் 01.30 மணிக்கு போன் செய்தார். பெரியகானுருக்கும், நம்பியாம்பாளையத்தும் சுமார் 8 கிலோ மீட்டர் தொலைவு இருக்கும். சுமார் 15 நிமிடத்தில் நம்பியாம்பாளையத்திலிருந்து பெரியகானுருக்கு செல்லலாம். சம்பவ சமயத்தில் நான் யாரை பார்த்து முதலில் ஏன் இப்படி செய்கிறீர்கள் என கேட்டேன் என்றால் இருவரும் ஒன்றாக நின்று கொண்டிருந்ததால் இருவரையும் பார்த்து தான் கேட்டேன்.

கிருஷ்ணமூர்த்திக்கும் எனக்கும் தான் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல, நான் அவர்களை கேட்ட பிறகு கார்த்தி தான் கீழே இருந்த கல்லை எடுத்து என்னை அடிக்க வீசினார், அப்போது என் தங்கை தடுத்ததால் கிருஷ்ணமூர்த்தி தான் அரிவாளை எங்கு இருந்து எடுத்து வந்து எங்களை தாக்கினார் கார்த்தி கல்லை வீசிய போது எங்களுக்கு அடிப்படவில்லை என்றால் சரியல்ல, என் தங்கை தடுக்க வந்தபோது அவருக்கு அடிப்பட்டது. எனக்கு கல்லால் எந்த அடியும் படவில்லை என்றால் சரிதான்.

என் தங்கை எனக்கு போன் செய்து சொன்ன பிறகு தான் நான் சம்பவ இடத்திற்கு சென்றேன் என்றால் சரிதான். நான் என் பைக்கில் ஆஜர் எதிரி கார்த்தியை உட்கார வைத்து காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றேன் என்றால் சரிதான். கிருஷ்ணமூர்த்தி அரிவாளை போட்டுவிட்டு ஓடி விட்டார். நான் முதலில் அவிநாசி அரசு மருத்துவமனைக்கு சென்றேன், காயம் பெரிய அளவில் இருந்ததால் எங்களை திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு செல்ல சொன்னதன் பேரில் திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். திருப்பூர் அரசு மருத்துவமனையில் இருந்து மருத்துவர் சொல்வதற்கு முன்பே நாங்கள் கிளம்பி விட்டோம் என்றால் சரியல்ல, அங்கு இரண்டு தினங்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்ற பிறகு மருத்துவர் கோவை அரசு

மருத்துவமனைக்கு செல்ல சொன்னதன் பேரில் கிளம்பினோம். எதிரி தாழ்த்தப்பட்ட சமூகத்தினை சேர்ந்தவர் என்பதால் அவர் மீது வேண்டுமென்றே பொய்யான புகாரினை அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. ஊருக்கு பொதுவான குளத்தில் எதிரிகள் குளிக்கக்கூடாது என்பதால் நானும் என் அண்ணனும் எதிரிகளுக்கு எதிரான பொய்யான புகாரினை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. கிருஷ்ணமூர்த்தி என்னை நான் சொல்வது அரிவாளால் தாக்கி இருந்தால் என்னால் இருசக்கர வாகனத்தில் ஆஜர் எதிரி கார்த்தியை அழைத்து கொண்டு காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றிருக்க வாய்ப்பில்லை என்றால் பைக்கை நான் ஓட்ட வில்லை, இன்னொரு நபர் தான் எங்களை உட்கார வைத்துக் கொண்டு ஓட்டி சென்றார்.

அ.சா.பொ.1 –ஆனது என் வீட்டில் இருந்து நான் கொடுத்தது என்றாலும், அ.சா.பொ.1 க்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. வழக்கு சம்பந்தமாக போலீசார் சம்பவ இடத்திற்கு அருகில் இருந்தவர்களை சரிவர விசாரிக்காமல் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. எனக்கு பெரிய அளவில் காயம் இல்லாததால் தான் நான் மருத்துவமனையில் இருந்து நானாகவே சீக்கிரம் வெளியேறி வந்துவிட்டேன் என்றால் சரியல்ல. அதனால் தான் காயம் சான்றிதழ் எதுவும் பெறவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(Sd.) A. Vijayalakshmi<br>குற்றவியல் நீதித்துறை நடுவர்(FAC),<br>அவிநாசி. |

| Free True copy of Deposition received | | |
|---|---|---|
| | | |
| Assistant Public Prosecutor | Witness | Accused/ Defence counsel |